பிப்ரவரி - 24

**"அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்." - ரோம 8 : 3, 4**

இந்த உறுதியில் எவ்வளவு ஆறுதலும் தேற்றுதலும் இருக்கின்றன! உண்மையாகவே இவைகள் ஆச்சரியமான ஜீவனின் வார்த்தைகளாக இருக்கின்றன. இவைகள் நம்மை நம்பிக்கையில் ஏவுகின்றன. தேவன் வரையறையற்ற மாம்சத்தின் பூரணத்துவத்துக்குப் பதிலாக, பூரண இருதய நோக்கங்களை அங்கீகரிப்பாரானால், அப்பொழுது உண்மையாகவே தேவன் நமக்குக் குறித்திருக்கிறதும், பூரணத்தின் திட்ட அளவுமாகிய அந்த தீட்ட சாவுக்கேதுவான சரீரங்கள் சம்பந்தப்பட்ட வரை நம்மால் ஆவியின் தேவைகளுக்கு ஏற்றவாறு நடக்க நம்மால் முடியாவிட்டாலும், ஆவியின்படி நாம் நடக்கக்கூடும். நம்முடைய மனது ஆவிக்கு ஏற்றவாறு நடக்கக் கூடும். நமது நோக்கங்கள் பூரணமானதாக இருக்கக்கூடும். நமது பரமபிதா நம்மில் தேடுவதும் நோக்கத்தின் பூரணத்துவம். **- Z '02, 248 (R 3060).**

பூரணத்துவத்திலிருந்து விழுந்ததின் காரணமாக நமது சரீர சம்பந்தமான, மனது சம்பந்தமான நல்நடத்தைக்குரிய தேவபக்திக்குரிய சக்திகளும் அபூரணமாக இருக்கின்றன. ஆகவே நாம் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றக்கூடாதவர்களாக இருக்கிறோம். அதை நிறைவேற்றுவதே பூரண மனிதனுடைய திறமையின் அளவு. ஆனால் பலவீனத்தினாலும் அறியாமையினாலும் நாம் செய்கிற எல்லாப் பாவங்களையும் மூடுகிற நீதியின் அங்கியை, நமது நிமித்தமாகக் கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் பலி, நமக்குக் கொடுக்கிறது. இந்தப் பாவங்கள் நமக்கு விரோதமாக எண்ணப்படாமல், நம்மை நடக்கிறவர்களாகக் கருதுங்கால், புது இருதயத்தில், மனதில், சித்தத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதியை நாம் நிறைவேற்றக்கூடும். **– P '27, 15, 16**

**ஒத்து வாக்கியங்கள் :-**

அப் 13:39; ரோம 3:20; 7:5-11; 10:4; கலா 2:16; 4:4,5; எபி 7:18; 10:1,2; 2கொரி 5:21; கலா 3:13; 5:16,25; தீத் 2:11,12;

**கோபுர வாசிப்பு : Z '12, 239 (R 5070).**

**வினாக்கள்** : இந்த வாரத்தில் கிறிஸ்து நிறைவேற்றிய கிரியையில் நான் நம்பிக்கையுள்ளவனாயிருந்தேனா? எப்படி? ஏன்? அது என்னை எவ்வாறு பாதித்தது?